ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா2ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ருதி3 ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வங்கமா முந்நீர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

**ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்**

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வங்கமா முந்நீர் ॥

## திருக்கண்ணங்குடி

‡வங்க மா முந்நீர் வரி நிறப் பெரிய⋆
வாள் அரவின் அணை மேவி⋆
சங்கமார் அங்கைத் தட மலர் உந்திச்⋆
சாம மா மேனி என் தலைவன்⋆
அங்கம் ஆறைந்து வேள்வி நால் வேதம்⋆
அருங்கலை பயின்று⋆ எரி மூன்றும்
செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர்⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே (1)

கவள மா கதத்த கரி உய்ய⋆ பொய்கைக்
கராம் கொளக் கலங்கி⋆ உள் நினைந்து
துவள⋆ மேல் வந்து தோன்றி வன் முதலை
துணிபடச்⋆ சுடு படை துரந்தோன்⋆
குவளை நீள் முளரி குமுதம் ஒண் கழுநீர்⋆
கொய்ம் மலர் நெய்தல் ஒண் கழனி⋆
திவளும் மாளிகை சூழ் செழு மணிப் புரிசைத்⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே (2)

வாதை வந்தடர வானமும் நிலனும்⋆
மலைகளும் அலை கடல் குளிப்ப⋆
மீது கொண்டுகளும் மீனுரு வாகி⋆
விரி புனல் வரி அகட்டொளித்தோன்⋆
போதலர் புன்னை மல்லிகை மௌவல்⋆
புது விரை மது மலர் அணைந்து⋆
சீதவொண் தென்றல் திசைதொறும் கமழும்⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே (3)

வென்றி சேர் திண்மை விலங்கல் மா மேனி⋆
    வெள்ளெயிற்றொள்ளெரித்தறு கண்⋆
பன்றியாய் அன்று பார் மகள் பயலை
    தீர்த்தவன்⋆ பஞ்சவர் பாகன்⋆
ஒன்றலா உருவத்துலப்பில் பல் காலத்து⋆
    உயர் கொடி ஒளி வளர் மதியம்⋆
சென்று சேர் சென்னிச் சிகர நல் மாடத்⋆
    திருக்கண்ணங்குடியுள் நின்றானே (4)

மன்னவன் பெரிய வேள்வியில் குறளாய்⋆
    மூவடி நீரொடும் கொண்டு⋆
பின்னும் ஏழ் உலகும் ஈரடியாகப்⋆
    பெருந் திசை அடங்கிட நிமிர்ந்தோன்⋆
அன்ன மென் கமலத்தணி மலர்ப் பீடத்து⋆
    அலை புனல் இலைக் குடை நீழல்⋆
செந்நெல் ஒண் கவரி அசைய வீற்றிருக்கும்⋆
    திருக்கண்ணங்குடியுள் நின்றானே (5)

மழுவினால் அவனி அரசை மூவெழுகால்⋆
    மணி முடி பொடிபடுத்து⋆ உதிரக்
குழுவுவார் புனலுள் குளித்து⋆ வெங்கோபம்
    தவிர்ந்தவன் குலை மலி கதலி⋆
குழுவும் வார் கமுகும் குரவும் நல் பலவும்⋆
    குளிர் தரு சூதம் மாதவியும்⋆
செழுமையார் பொழில்கள் தழுவுநன் மாடத்⋆
    திருக்கண்ணங்குடியுள் நின்றானே (6)

வானுளார் அவரை வலிமையால் நலியும்⋆
    மறி கடல் இலங்கையார் கோனை⋆
பானு சேர் சரத்தால் பனங்கனி போலப்⋆
    பரு முடி உதிர வில் வளைத்தோன்⋆
கானுலா மயிலின் கணங்கள் நின்றாடக்⋆
    கண முகில் முரசம் நின்றதிர⋆

தேன் உலா வரி வண்டின்னிசை முரலும்⋆
    திருக்கண்ணங்குடியுள் நின்றானே (7)

அரவு நீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை⋆
    அஞ்சிடாதே இட⋆ அதற்குப்
பெரிய மா மேனி அண்டம் ஊடுருவப்⋆
    பெருந் திசை அடங்கிட நிமிர்ந்தோன்⋆
வரையின் மா மணியும் மரகதத் திரளும்⋆
    வயிரமும் வெதிர் உதிர் முத்தும்⋆
திரை கொணர்ந்துந்தி வயல்தொறும் குவிக்கும்⋆
    திருக்கண்ணங்குடியுள் நின்றானே (8)

பன்னிய பாரம் பார் மகட்கொழியப்⋆
    பாரத மாபெரும் போரில்⋆
மன்னர்கள் மடிய மணி நெடுந் திண் தேர்⋆
    மைத்துனர்க்குய்த்த மா மாயன்⋆
துன்னு மாதவியும் சுரபுனைப் பொழிலும்⋆
    சூழ்ந்தெழு செண்பக மலர்வாய்⋆
தென்னவென்றளிகள் முரன்றிசை பாடும்⋆
    திருக்கண்ணங்குடியுள் நின்றானே (9)

‡கலையுலாவல்குல் காரிகை திறத்துக்⋆
    கடல் பெரும் படையொடும் சென்று⋆
சிலையினால் இலங்கை தீயெழச் செற்ற⋆
    திருக்கண்ணங்குடியுள் நின்றானை⋆
மலைகுலா மாட மங்கையர் தலைவன்⋆
    மான வேல் கலியன் வாய் ஒலிகள்⋆
உலவுசொல் மாலை ஒன்பதோடொன்றும்⋆
    வல்லவர்க்கில்லை நல்குரவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥